# கெஅடிலான் பொதுத்தேர்தல் இயக்குநர்களாக நூருல்- சைஃபுடின் நியமனம்

கோலாலம்பூர், ஜூன் 23-

கெஅடிலான் கட்சியின் கூட்டுப் பொதுத்தேர்தல் இயக்குநர்களாக அக்கட்சியின் தேசியத் துணைத் தலைவர் நூருல் இஸ்ஸா அன்வார், உள்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சைஃபுடின் நசுத்தியோன் இஸ்மாயில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். நேற்று நடைபெற்ற கெஅடிலான் மத்திய செயலவைக் கூட்டத்திலும் அதன் அரசியல் பிரிவுக் கூட்டத்திலும் டத்தோஸ்ரீ ரஃபிஸி ரம்லி சேவைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டதாக கெஅடிலான் தகவல் குழுத் தலைவர் டத்தோ ஃபாமி ஃபட்ஸில் தெரிவித்ததார்.

கெஅடிலான் தேசியத் துணைத் தலைவர் தேர்தலில் நூருலிடம் தோல்வி கண்ட ரஃபிஸி பொருளாதார அமைச்சர் பதவியிலிருந்து விலகியிருக்கிறார். கட்சிக்கு மகத்தான சேவையாற்றிய அனைத்துத் தலைவர்களுக்கும் நேற்றைய கூட்டம் நன்றியைப் பதிவு செய்தது. அவர்கள் அனைவரும் கட்சிக்கும் கட்சியின் போராட்டத்திற்கும் தொடர்ந்து பங்காற்ற வேண்டும் என கட்சி எதிர்பார்க்கிறது என்றும் அவர் கூறினார்.





நேற்றைய கூட்டத்தில் நடப்பு விவகாரங்கள் விவாதிக்கப்பட்டன. உலகப் பொருளாதாரம், அரசியல் விவகாரம் உள்ளிட்ட விஷயங்களும் விவாதிக்கப்பட்டன. அதேசமயம் சபா மாநில சட்டமன்றத் தேர்தலைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் பற்றியும் விவாதிக்கப்படது என்று அவர் கூறினார்.

இதற்கிடையே கட்சியின் தலைமைச் செயலாளராக ஃபுஸியா சாலே, தலைமைப் பொருளாளராக வில்லியம் லியோங், சபா மாநிலத் தலைவராக முஸ்தாபா சக்மூட் ஆகியோர் தங்கள் பதவியில் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். கட்சித் தேர்தலில் தனது தேசிய உதவித் தலைவர் பதவியை தற்காத்துக்கொள்வதில் தோல்வி கண்ட நிக் நஸ்மி நிக் அகமட்டும் இயற்கை வள சுற்றுச்சூழல் அமைச்சர் பதவியிலிருந்து விலகி இருக்கின்றார். இவர் செத்தியா வங்சா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார்.

# மாமன்னருடன் பிரதமர் சந்திப்பு

கோலாலம்பூர், ஜூன் 23-

மாட்சிமை தங்கிய மாமன்னர் சுல்தான் இப்ராஹிமை நேற்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் சந்தித்துப் பேசினார். தலைநகர் கோலாலம்பூரில் உள்ள இஸ்தானா புக்கிட் துங்குவில் சுமார் 2 மணி நேரம் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. பல்வேறு நடப்பு நிலவரங்கள் குறித்த தகவல்களைப் பிரதமர் இந்தச் சந்திப்பில் மாமன்னரிடம் சமர்ப்பித்தார். சுல்தான் இப்ராஹிம் சுல்தான் இஸ்கண்டார் முகநூல் பதிவில் இந்தத் தகவல் இடம்பெற்றுள்ளது.



# மீ தயாரிப்புக் கடையில் பாராங்கத்தி முனையில் கொள்ளை முயற்சி

உலுசிலாங்கூர், ஜூன் 23-

உலுயாம் பாரு, உலுசிலாங்கூரில் மீ தயாரிப்புக் கடையில் புகுந்த பாராங்கத்தி வைத்திருந்த இருவர் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டனர். நேற்றுக் காலை 6.42 மணிக்கு நிகழ்ந்த இந்தச் சம்பவம் சமூக ஊடகங்களில் வைரலானது. கறுப்பு நிற உடை, தொப்பி, முகமூடி அணிந்திருந்த அவ்விருவரும் பாராங்கத்தியால் அங்கிருந்தவரைத் தாக்கிய காட்சி சமூக ஊடகங்களில் வைரலானது. ஜூன் 18ஆம் தேத இச்சம்பவம் நிகழ்ந்திருக்கிறது என்று உலுசிலாங்கூர் மாவட்ட போலீஸ்இடைக்கால தலைவர் டிஎஸ்பி முகமட் அஸ்ரி முகமட் யூனுஸ் தெரிவித்தார்.

உலுயாம் பாருவில் உள்ள மீ தயாரிப்பபுக் கடைக்குள் அவ்விருவரும் பின்புறக் கதவு வழியாக நுழைந்துள்ளனர். பாராங்கத்தியால் அங்கிருந்தவரைத் தாக்க முயன்றனர். அவர் பயத்தால் அலறியபோது அந்த இருவரும் எந்தப் பொருட்களையும எடுக்காமல் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தனர். ஆயுதமேந்திய கொள்ளையர்களைத் தேடும்பணியில் போலீசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தகவல் அறிந்த பொதுமக்கள் 03-6064 1132 எனும் தொலைபேசி எண்களில் உலுசிலாங்கூர் மாவட்ட போலீஸ் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.


KEMENTERIAN PERALIHAN TENAGA DAN TRANSFORMASI AIR

Suruhanjaya Tenaga
Energy Commission

# FAHAMI BIL ANDA

Selari dengan pengumuman Penstrukturan Tarif Elektrik yang berkuat kuasa pada 1 Julai 2025, berikut merupakan komponen dalam bil anda:

## E-BIL



1 Jumlah perlu dibayar

2 Trend penggunaan untuk 6 bulan

3 Senarai komponen yang lebih terperinci:

- **Caj Penjanaan**
  - Tenaga
  - Pelarasan Kos Bahan Api Secara Automatik (AFA)
  - Kapasiti
- **Caj Rangkaian**
- **Caj Peruncitan**
- **Insentif Cekap Tenaga**

## BIL FIZIKAL



1 Jumlah perlu dibayar

2 Senarai komponen yang lebih terperinci:

- **Caj Penjanaan**
  - Tenaga
  - Pelarasan Kos Bahan Api Secara Automatik (AFA)
  - Kapasiti
- **Caj Rangkaian**
- **Caj Peruncitan**
- **Insentif Cekap Tenaga**

Untuk maklumat lanjut, layari **www.mytnb.com.my/tariff**

Tertakluk kepada Semenanjung Malaysia sahaja.